# 13 செய்ந்நன்றி அறிதல்



தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை செய்ந்நன்றி எனப்படும். இனியவை கூறி இல்லறம் வழுவாதார்க்கு செய்ந்நன்றி அவசியம் என்பதால் இனியவை கூறல் என்ற அதிகாரத்தின் பின் வைக்கப்பட்டது.

1. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
   வானகமும் ஆற்றல் அரிது

**செய்யாமல் செய்த உதவிக்கு** - தனக்கு முன் ஓர் உதவி செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த உதவிக்கு, **வையகமும் வானகமும் ஆற்றல் அரிது** - மண்ணுலகும் விண்ணுலகும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஒத்தல் அரிது.

கருத்துரை - முன் ஓர் உதவியும் செய்யாதிருக்க, தனக்குப் பிறன் செய்யும் உதவிக்கு ஈடாக மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் கொடுத்தாலும் போதாது.

2. காலத்தினால் செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

**காலத்தினால் செய்த நன்றி** - ஒருவனுக்கு இறுதி வந்த எல்லைக்கண் ஒருவன் செய்த உபகாரம், **சிறிது எனினும் ஞாலத்தில் மாணப் பெரிது** - தன்னை நோக்கச் சிறியதாயிருந்தது ஆயினும் அக்காலத்தை நோக்க நிலவுலகத்தினும் மிகப் பெரிது.

கருத்துரை - ஒருவன் காலத்தால் செய்த உதவி சிறியதாயினும் அது உலகினும் பெரிது.

3. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது

**பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்** - இவர்க்கு இது செய்தால் இன்னது பயக்கும் என்று ஆராய்தல் இலராய்ச் செய்த உதவியாகிய ஈரமுடைமையை ஆராயின், **நன்மை கடலின் பெரிது** - அதன் நன்மை கடலினும் பெரிது ஆம்.

கருத்துரை - பயனை எதிர்பாராமற் செய்த உதவியின் நன்மை கடலினும் பெரிதாகும்.

4. தினைத்துணை நன்றி செயினும், பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரிவார்

**தினைத்துணை நன்றி செயினும்** - தமக்குத் தினையளவிற்றாய உபகாரத்தை ஒருவன் செய்தானாயினும், **பனை துணையாக்கொள்வர் பயன் தெரிவார்** - அதனை அவ்வளவிற்றாக் கருதாது பனை யளவிற்றாகக் கருதுவர் அக் கருத்தின் பயன் தெரிவார்.

கருத்துரை - தினை அளவு உதவி செய்தாலும் அதனைப் பனை அளவாகக் கொள்வர் பெரியோர்.

5. உதவிவரைத்தன்று உதவி; உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து

**உதவி வரைத்து அன்று** - கைம்மாறான உதவி காரணத்தாலும் பொருளானும் காலத்தானும் ஆகிய மூவகையானும் முன்செய்த உதவியளவிற்று அன்று. **உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து** - அதனைச் செய்வித்துக்கொண்டவர் தம் அமைதி அளவிற்று.

கருத்துரை - உதவிக்கு அளவில்லை. அது பெற்றுக்கொண்டவர் தகுதியின் அளவை உடையதாகும்.

6. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்புஆயார் நட்பு

**துன்பத்துள் துப்பு ஆயார் நட்பு துறவற்க** - துன்பக் காலத்துத் தனக்குப் பற்றுக்கோடாயினாரது நட்பை விடாதொழிக. **மாசு அற்றார் கேண்மை மறவற்க** - அறவொழுக்கங்களில் குற்றமற்றாரது கேண்மையை மறவாதொழிக.

கருத்துரை - குற்றமற்றவர் நட்பை மறக்கக் கூடாது. துன்பக் காலத்தில் உதவியவரின் நட்பை விடலாகாது.

7. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தம்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு

**தம்கண் விழுமம் துடைத்தவர் நட்பு** - தம்கண் எய்திய துன்பத்தை நீக்கினவருடைய நட்பினை, **எழுமை எழுபிறப்பும் உள்ளுவர்** - எழுமையினையுடைய தம் ஏழு பிறப்பினும் நினைப்பர் நல்லோர்.

கருத்துரை - துன்பத்தைப் போக்கினவரின் நட்பை ஏழு பிறப்பிலும் நினைப்பர் பெரியோர்.

8. நன்றி மறப்பது நன்றன்று நன்று அல்லது
அன்றே மறப்பது நன்று

**நன்றி மறப்பது நன்று அன்று** - ஒருவன் முன் செய்த நன்மையை மறப்பது ஒருவற்கு அறன் அன்று. **நன்று அல்லது அன்றே மறப்பது நன்று** - அவன் செய்த தீமையைச் செய்த பொழுதே மறப்பது அறன்.

கருத்துரை - ஒருவர் செய்த உதவியை மறப்பது அறம் அன்று. அவர் செய்த தீமையை அன்றே மறப்பதே தருமம் ஆகும்.

9. கொன்று அன்ன இன்னா செயினும், அவர் செய்த
ஒன்று நன்று உள்ளக்கெடும்

**கொன்று அன்ன இன்னா செயினும்** - தமக்கு முன் ஒரு நன்மை செய்தவர் பின் கொன்றால் ஒத்த இன்னாதவற்றைச் செய்தாராயினும், **அவர் செய்த நன்று ஒன்று உள்ளக் கெடும்** - அவையெல்லாம் அவர் செய்த நன்மை ஒன்றையும் நினைக்க இல்லையாம்.

கருத்துரை - நன்மை செய்தவர் கொன்றாற் போலும் தீமை செய்தாலும் முன் செய்த நன்மையை நினைத்தால் தீமையெல்லாங் கெடும்.

10. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுஉண்டாம் உய்வு இல்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுஉண்டாம்** - பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும் பாவத்தின் நீங்கும் வாயில் உண்டாம். **உய்வு இல்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு** - ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்த மகனுக்கு அஃது இல்லை.

கருத்துரை - எவ்வகைத் தருமங்களை அழித்தவர்களுக்கும் தப்ப வழியுண்டாம். செய்ந்நன்றி மறப்பவர்க்கு கடைத்தேற வழியேயில்லை.

◆ அரும்பதங்கள்

| | | | |
|---|---|---|---|
| வையகம் | - உலகம் | ஞாலம் | - உலகம் |
| தினை | - சிறிய தானிய வகை | மாசற்றார் | - குற்றமற்றவர் |
| கேண்மை | - நட்பு | விழுமம் | - துன்பம் |
| இன்னா | - தீமை | | |

## கிரகித்தல் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. செய்ந்நன்றி அறிதல் என்றால் என்ன?
2. இவ்வதிகாரம் எவ்வதிகாரத்தின் பின் வைக்கப்பட்டுள்ளது?
3. செய்யாமல் செய்த உதவி பற்றி வள்ளுவர் என்ன கூறுகின்றார்?
4. எதனை மறக்க வேண்டும், எதனை மறக்கக் கூடாது என வள்ளுவர் கூறுகின்றார்?
5. செய்ந்நன்றி மறந்தவரின் நிலை யாது?
6. இவ்வதிகாரத்தில் உதவி பற்றிக் கூறியுள்ளவற்றைத் தருக.

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. திருக்குறள்களை மனனம் செய்து ஓதுவதற்கு வழிகாட்டுக.
2. திருவள்ளுவர் பற்றிய குறிப்புரை எழுதுவதற்கு விளக்கமளிக்குக.
3. திருக்குறளின் கருத்துக்களை தமது சொந்த மொழிநடையில் கூற வழிகாட்டுக.

**பயிற்சி**

1. தரப்பட்டிருக்கும் குறள்களைச் சந்தி பிரித்து மீண்டும் எழுதிக் காட்டுக.
2. திருக்குறள் பற்றிய பேச்சொன்றை எழுதிக்காட்டுக.